# ஆசையாய்ப் பின்தொடர வேண்டிய பரம காரியங்கள்

Transcribed from a message spoken in August 2016 in Chennai

By *R.S.Milton*

தேவனுடைய மக்களாகிய நாம் ஆசையாயப் பின்தொடர வேண்டிய சில பரமகாரியங்கள் உள்ளன. நம்முடைய வாழ்க்கையில் நாமெல்லாரும் ஏதோவொன்றை ஆசையாய்ப் பின்தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறோம். எல்லா மனிதர்களும் ஏதோவொன்றை ஆசையாய் பின்தொடர்கின்றார்கள். பல்வேறு காரியங்களை நாம் செய்யலாம். ஆனால், அவைகளின் மத்தியிலே நாம் ஆசையாய்ப் பின்தொடர்கிற ஏதொவொன்று உண்டு. எதை நாம் ஆசையாய்ப் பின்தொடர்கின்றோமோ அதை நாம் பெறும்போது அது நமக்குப் பெரிய திருப்தியைத் தரும். நாம் ஆசையாய்ப் பின்தொடர்வதைப் பெறாதபோது வாழ்க்கையில் திருப்தியில்லாமல் போய்விடும்: அது வெறுமையான வாழ்க்கையாக மாறிவிடும்.

## ஒருமுகமும், முழு இருதயமும்

தேவனுடைய மக்களாகிய நாம் பரம காரியங்களை ஆசையாய்ப் பின்பற்ற வேண்டும். நாம் ஏதோவொன்றை ஆசையாய்ப் பின்பற்ற வேண்டுமென்றால் அதன்மேல் நாம் ஒருமுகமாகவும், முழு இருதயத்தோடும் இருக்க வேண்டும். ஒருமுகம் இல்லாத அல்லது முழு இருதயம் இல்லாத ஒன்றை நாம் ஆசையாய்ப் பின்பற்ற மாட்டோம். எதன்மேல் நமக்கு ஒருமுகமும், முழு இருதயமும் இருக்கிறதோ அதைத்தான் நாம் ஆசையாய்ப் பின்பற்றுவோம். நம்மை யாரும் வற்புறுத்தி, எதையும் ஆசையாய்ப் பின்பற்ற வைக்க முடியாது. ஒரு ஒருமுகம் இல்லையென்றால், முழு இருதயம் இல்லையென்றால் நாம் எதையும் ஆசையாய்ப் பின்பற்றவும் மாட்டோம், அதை நாம் பெறவும் மாட்டோம்.

"இதை நான் பின்பற்றவும், பெறவும் விரும்புகிறேன்," என்று சொல்லும்போதுகூட நம்முடைய கவனத்தைத் திசைதிருப்புவதற்கு பல்வேறு காரியங்கள் நம்முடைய வாழ்க்கையில் நிகழும். "நான் ஆசையாய்ப் பின்தொடர வேண்டிய பரம காரியம் இதுவா அல்லது அதுவா?" என்பதுபோல ஒரு குழப்பம் நம்முடைய வாழ்க்கையில் நேரிடும். ஒரு பரம காரியத்தைப் பின்பற்றுவதற்குப்பதிலாக பரம காரியத்தைப்போலத் தோன்றுகிற ஒரு போலியான காரியத்தை நாம் பின்பற்றுகிற சாத்தியக்கூறும், வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, தேவனுடைய மக்கள், "இது உண்மையாகவே பரம காரியமா அல்லது பரம காரியத்தைப்போலக் காட்சியளிக்கிற ஒரு போலியான காரியமா?" என்று இனங்காண வேண்டும், பகுத்துணர வேண்டும், வேறுபிரித்துப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய வாழ்க்கை முழுவதும் பரம காரியத்தைப்போல் தோற்றமளிக்கிற, காட்சியளிக்கிற, ஒன்றை நாம் பின்பற்றிக் கொண்டே போவோம். முடிவிலே அது வெறுமையாகத் தோன்றும்.

## வெகுமதியைப் பெற இலக்கைநோக்கி பரம அழைப்பு

"*பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே,*" (எபி. 3:1) என்று எபிரேயருக்கு எழுதின கடிதத்தின் ஆசிரியர் கூறுகிறார். தேவன் நம்மை ஒரு பரம அழைப்போடு அழைத்திருக்கிறார். அது இந்தப் பூமியிலே ஏதோவொரு இலக்கை நாம் எட்ட வேண்டும் என்கிற அழைப்பு அல்ல. பரத்திற்குரிய ஒரு இலக்கை நாம் எட்ட வேண்டும் என்பது தேவனுடைய அழைப்பு. இந்த இலக்கை எட்டுவதற்காக நாம் எல்லாரும் அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்தப் பரம அழைப்பைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் "*கிறிஸ்து இயேசுவில் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்*" (பிலி. 3:13-15) என்று கூறுகிறார்.

*தொடருகிறேன்* என்று தமிழிலே இருப்பதின் சரியான மொழியாக்கம் "ஆசையாய்ப் பின்தொடர்கிறேன்," என்பதாகும். ஆகவேதான், நாம் அதை *ஆசையாய்ப் பின்தொடர வேண்டிய பரம காரியங்கள்* என்று சொல்லுகிறோம்.

*ஆசையாய்ப் பின்தொடர வேண்டிய பரம காரியங்கள்.* தேவனுடைய மக்களாகிய நம்மெல்லாரையும் தேவன் ஒரு இலக்கை நோக்கி அழைத்திருக்கிறார்; ஒரு இலக்கை நாம் எட்ட வேண்டும் என்பதற்காக தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையிலே நாம் எட்டவேண்டிய, போய்ச்சேர வேண்டிய, ஒரு இலக்கு இருக்கிறது. அந்த இலக்கை நாம் எட்டும்போது தேவன் ஒரு பெரிய வெகுமதியை நமக்குத் தருகிறார். *பந்தயப்பொருள்* என்று சொல்லப்பட்டிருப்பது ஒரு *வெகுமதி*யாகும்.

தேவனுடைய மக்களும்கூட உலகத்துக்குரிய ஒரு வெற்றியை, ஒரு நன்மையை, பெறுவதற்காக எதை வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். "நீங்கள் தேவனுக்காக இதைச் செய்தால் தேவன் இந்த உலகத்துக்குரிய, பூமிக்குரிய, இப்படிப்பட்ட ஒரு நன்மையை உங்களுக்குத் தருவார்,"

என்று சொன்னால் அதை அவர்கள் மிகவும் ஆசையாய்ப் பின்தொடருவார்கள். தேவன் நமக்கு ஒரு மாபெரும் வெகுமதியை வைத்திருக்கிறார். ஒருவேளை அந்த வெகுமதியினுடைய ஒரு அம்சமாக இந்த உலகத்திலும் நாம் ஒரு சில நன்மைகளை அனுபவிப்போம். ஆனால், இந்த வெகுமதி வெறு மனே உலகத்திற்குரியதல்ல.

தேவனுடைய மக்களுக்கு இது மிகவும் அதிருப்தியைத் தரலாம். பொதுவாக, மக்கள் உடனடியாக நன்மையைப் பெறும்போது மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். காலம் தாழ்த்தி வருகிற நன்மையைக் குறித்து அவர்கள் மகிழ்ச்சியடையமாட்டார்கள். உடனடியாக வருகிற தீமையைக்குறித்து அவர்கள் பயப்படுவார்கள். காலம் தாழ்த்தி வருகிற தீமையைக்குறித்து அவர்கள் பயப்படமாட்டார்கள். அடுத்த தலைமுறையிலே வரப்போகிற தீமையைக்குறித்து அவர்கள் ஒருவிதத்திலே இளைப்பாறுதல்கூட அடைவார்கள். “நல்லகாலம், அது என்னுடைய நாட்களில் நடைபெறாது. என்னுடைய பிள்ளைகள்தான் அதை அனுபவிப்பார்கள்,” என்று சொன்ன எசேக்கியாவைப்போல இன்றைக்கும் மனிதர்கள் இருக்கத் தான் செய்கிறார்கள்.

தேவன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் ஒரு இலக்கை நாம் எட்ட வேண்டும். நாம் அந்த இலக்கை எட்டினால் தேவன் நமக்கு ஒரு வெகுமதியைத் தருவார். “என்றைக்கோ தேவன் தரப்போகிற வெகு மதிக்காக நான் இப்படியெல்லாம் என்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டுமா?” என்று நீங்கள் சொல்லலாம். ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். என்றைக்கோ தேவன் தருகிற வெகு மதியின் முன்சுவையை நாம் இன்றைக்கும் அனுபவிக்கலாம். “இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் அல்லது அலட்சியம் செய்தால் அல்லது அசட்டை பண்ணி னால்,” (எபி. 2:4) என்று வாசிக்கிறோம்.

**அழைப்பு, இலக்கு, வெகுமதி** என்ற வார்த்தைகளை நீங்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும். இதை வைத்திருக்க வேண்டிய தேவனுடைய மக்கள் அதைத் தவறவிடுகிற வாய்ப்பு உள்ளது. எபிரேயர் 4:1 அப்படிப்பட்ட ஒரு வசனம். “*ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போன வனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்.*” என்றைக்கு நாம் அந்த இலக்கை எட்டி வெகுமதியைப் பெறுகிறோமோ அப்போது நமக்குக் கிடைப்பதுதான் இளைப்பாறுதல்.

ஒலிம்பிக் பந்தயத்தில் ஒரு வெகுமதியைப் பெறவேண்டும் என்பதற்காக அவர்கள் எத்தனையோ வருடங்கள் பயிற்சிசெய்து பிரயாசப்படுகிறார்கள். அவர்கள் அந்த இலக்கை எட்டி, வெகுமதியைப் பெறும்போது அவர்களுக்குக் கிடைக்கிற அந்த நிலைமைதான், உணர்ச்சிதான், இளைப்பாறுதல், நிறைவு அல்லது திருப்தி. அதை அடைபவர்கள்தான் அந்த உணர்ச்சி எப்படி இருக்கிறது என்பதை வருணிக்க முடியும். ஒருவேளை அந்த உணர்ச்சி எவ்வளவு காலம் இருக்கும் என்று தெரியாது. ஒரு மனிதன் “When you reach the top, it is not as exciting as it appeared to be” என்று சொன்னான். அதாவது “நீ உச்சக்கட்டத்தை எட்டும்போது, முதலில் அது எந்த அளவுக்குப் பரவசமாகத் தோன்றினதோ அந்த அளவுக்கு அது ஒன்றும் பரவசமாகத் தோன்றவில்லை,” என்று சொன்னான். அவர்கள் அந்த வெகுமதியைப் பெறும்போது ஒரு இளைப்பாறுதலைப் பெறுவார்கள். ஆனால், அந்த இளைப்பாறுதல் ரொம்ப நாளைக்குத் தங்கியிருக்காது.

தேவனுடைய மக்களுக்கு தேவன் அப்படிப்பட்ட ஒரு இலக்கையும், வெகுமதியையும் வைத்திருக்கிறார். ஆனால், தேவனுடைய மக்கள் பலர் அந்த இலக்கை எட்டாமல், வெகுமதியைப் பெறாமல், தவற விடுகிற வாய்ப்பு உண்டு என்று எபிரேயர் 4:1 கூறுகிறது. “அப்படி நீங்கள் யாரும் அந்த இலக்கை எட்டாமல், வெகுமதியைப் பெறாமல், தவறவிட்டுவிடக் கூடாது,” என்று எபிரேயர் 4:1 கூறுகிறது. “உங்களுக்கு அது நேரிடக்கூடாது” என்று அந்த ஆசிரியர் எச்சரிக்கிறார்.

இப்படி நாம் ஆசையாய்ப் பின்பற்ற வேண்டிய அந்த இலக்கும், வெகுமதியும் என்ன என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு நான்கு குறிப்புகளை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நம்முடைய இறுதி வெகுமதி, ஒரு பொருளல்ல, ஒரு நபர் என்று தேவனுடைய வார்த்தையை அறிந்த நம் எல்லாருக்கும் தெரியும். நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய பெரிய வெகுமதியாகப் பெறுவோம். ஆனால், நாம் இலக்கை எட்டி, வெகுமதியைப் பெறுவதற்கு முந்தியேகூட ஒவ்வொரு நாளும் நம் முடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நாம் ஆதாயம்பண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது. தேவனுடைய மக்கள் எல்லாருக்கும், குறிப்பாக வாலிப பருவத்தில் உள்ள தேவனுடைய மக்களுக்கு, இந்த இலக்கை எட்டுவதற்குப் பல தடைகள் உண்டு.

நான் ஒரு கடையிலே ஆயிரம் ரூபாய் தாளைப் பார்த்தேன். அசல் ஆயிரம் ரூபாய், ஐநூறு ரூபாய் போல அப்படியே அச்சடித்து வைத்திருக்கிறார்கள். அசல் ஆயிரம் ரூபாயையும், அந்தப் போலி ஆயிரம் ரூபாயையும் பார்த்தால் ஏறக்குறைய அப்படியே இருக்கிறது. எது அசல், எது போலி என்று தெரியாத அளவுக்குச் சரியாக இருந்தது. போலி பார்ப்பதற்கு அசலைவிட அழகாக இருக்கிறது. நாம் கிறிஸ்துவை ஆசையாய்ப் பின்பற்றாதபடிக்குத் தேவனுடைய எதிரியாகிய சாத்தான் அதற்கு அருகிலேயே இன்னொரு போலியை வைப்பான்.

## நான்கு குறிப்புகள்

கண்டிப்பாக நம்முடைய வாழ்க்கையிலே ஒரு அமைப்பு அவசியம். ஆனால், கிறிஸ்துவுக்கு இணையாக ஒரு அமைப்பை உருவாக்கி, தேவனுடைய மக்களுடைய கவனத்தைத் திசைதிருப்புவது எதிரியினுடைய வேலை. அதனால் என்னுடைய **முதல் குறிப்பு, கிறிஸ்துவும், அமைப்பும். Christ and system**. உடனே System அல்லது அமைப்பு என்ற வார்த்தையை எதிர்மறையாக நீங்கள் கருதிவிட வேண்டாம். நான் சொன்னதுபோல ஒரு அமைப்பு என்பது மனித வாழ்க்கையிலே அவசியம். இது தேவைப்படுகிறது. ஒரு அமைப்பு இல்லையென்றால் மனித வாழ்க்கையிலே நாம் திறமையாக வாழ முடியாது.

ஒருவன் ஒரு போலி ஆயிரம் ரூபாய் நோட்டைச் செய்ய முயன்றால் அது என்ன நிறத்தில் இருக்கும்? சிவப்பாகத்தான் இருக்கும். ஏனென்றால், போலி ஏறக்குறைய அசலைப்போலவே இருக்கும். போலி ஆயிரம் ரூபாய் நோட்டைச் செய்கிறவன் அதை நீல நிறத்திலோ அல்லது பச்சை நிறத்திலோ செய்ய மாட்டான். அதுபோல அறவே பயனில்லாத ஒன்றை அல்லது தீமையைத் தருகிற ஒன்றை சாத்தான் பயன்படுத்துவதைவிட "இது நன்மை தருகிற ஒன்று. இதிலே நன்மை இருக்கிறது," என்பதைத்தான் அவன் அதிகமாகப் பயன்படுத்துவான். எனவே, கிறிஸ்துவுக்கு அருகிலே ஒரு அமைப்பை வைத்து தேவனுடைய மக்களுடைய கவனத்தைத் திருப்புவான்.

இரண்டாவது, **பரிசுத்த ஆவியும் அல்லது ஆவியானவரும், சத்தியமும். The Spirit and the truth**. சத்தியம் என்கிற வார்த்தை தேவனுடைய மக்களுக்கு ரொம்பப் பிடிக்கும். நாம் சகோதரர்களை, கிறிஸ்தவர்களை, சந்திக்கும்போது அவர்கள் கேட்கிற ஒரு கேள்வி, "உங்களுடைய சத்தியம் என்ன? உங்களுடைய உபதேசம் என்ன?" இந்தக் கேள்வியை நீங்கள் சந்தித்திருக்கிறீர்களா? அது மிகவும் நேர்மறையானது.

மூன்றாவது, **சபையும், நிறுவனமும். Church and institution**. A school is an institution. A hospital is an institution. A factory is an institution. அவர்கள் பள்ளிக்கூடம், மருத்துவமனை, தொழிற்சாலை ஆகியவைகளை நிறுவனங்களாக அமைத்திருப்பதால்தான் அவைகளை வெற்றிகரமாக இயக்கி, வேண்டியதைச் செய்து முடிக்கிறார்கள்.

நான்காவதும், கடைசியுமாக நான் சொல்வது **ஊழியமும், தொழிலும். Ministry and profession**. முதலாவது, Christ and system. இரண்டாவது, The Spirit and the truth. மூன்றாவது, Church and institution. நான்காவது, Ministry and profession.

## I. கிறிஸ்துவும், அமைப்பும்

முதலாவது, கிறிஸ்துவும் அமைப்பும். ஒவ்வொன்றிலும் சில உபகுறிப்புகளைச் சொல்வேன். பெரிய குறிப்பில் மூன்று உபகுறிப்புகளைச் சொல்கிறேன். முதல் உபகுறிப்பு, **இயேசுகிறிஸ்துவின்மேல் அன்புகூருவது**. இரண்டாவது குறிப்பு, **கிறிஸ்துவை அறிவது அல்லது கிறிஸ்து எல்லாமுமாவது**. மூன்றாவது, **கிறிஸ்து வெளியாவது**. Loving Christ, Knowing Christ or Christ becoming our all, Expressing Christ. இந்த மூன்று உபகுறிப்புகளைக்குறித்து சில குறிப்புகளைச் சொல்லப்போகிறேன்.

### கிறிஸ்துவா அல்லது யுக்திகளும், உபாயங்களும், சூழ்ச்சிகளுமா

கிறிஸ்தவ நம்பிக்கை என்பது ஒரு அமைப்புமுறையல்ல. கிறிஸ்தவ நம்பிக்கை என்பது வாழ்கின்ற ஒரு நபரோடு நமக்கு உள்ள உறவு. இதை நாம் ஓங்கிப் பறைசாற்ற வேண்டும். கிறிஸ்தவ நம்பிக்கை என்பது ஒரு தத்துவ அமைப்புமுறை அல்ல. Christian faith or Christian gospel is not a philosophical system. Christian gospel is a relationship with a living person Jesus Christ. ஒரு தத்துவ அமைப்புமுறையிலே பல techniques, tools, strategies இருக்கும். இந்த உலகத்திலே பல குருக்கள் எழுகின்றார்கள். வாழும் கலை என்கிறார்கள்; life engineering என்கிறார்கள். எதையுமே engineering என்றுதான் சொல்ல வேண்டுமாம். சாப்பிடுவதை food engineering என்று சொல்ல வேண்டுமாம். Relationship என்

றால் relationship engineering என்று சொல்ல வேண்டுமாம். எதை வேண்டுமானாலும் engineering என்று சொல்ல வேண்டுமாம். இப்படிக் குருக்கள் என்று எழும்புகின்றவர்கள் "வாழும் கலை, How to live a stress free life? அழுத்தம் இல்லாத ஒரு வாழ்க்கை வாழ்வது எப்படி? நண்பர்களை வெல்வது எப்படி? உங்களைச் செல்வந்தராக்க மற்றவர்களை வேலைசெய்ய வைப்பது எப்படி?" என்றெல்லாம் பல யுக்தி களையும், உபாயங்களையும், சூழ்ச்சிகளையும் மக்களுக்குக் கற்றுத்தருவார்கள்.

ஆனால், கிறிஸ்தவ நம்பிக்கை, கிறிஸ்தவ நற்செய்தி, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்னும் உயிர் வாழும் நபரோடு நம்மை ஒரு உறவுக்குக் கொண்டுவந்திருக்கிறது. பாவ மன்னிப்பு, பாவத்திலிருந்து விடுதலை, மனித வாழ்க்கை நேர்த்தியாக வாழ்வது ஆகியவைகளெல்லாம் ஆண்டவராகிய இயேசு என்ற நபரோடு நமக்குள்ள உறவு எப்படிப்பட்டது என்பதைப் பொறுத்திருக்கின்றன.

கலாத்தியர் 2:20; எபேசியர் 6:24; 1 கொரிந்தியர் 16:22போன்ற சில வசனங்களை உங்களுக்கு ஆதார மாகத் தருகிறேன்.

## கிறிஸ்துவா அல்லது நியாயப்பிரமாணமா

"*கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும் வாழ்கிறேன். இனி நானல்ல, கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார். நான் என் மாம்சத்தில் இப்பொழுது வாழ்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக் காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே வாழ் கிறேன்*" (கலா. 2:20). கலாத்தியர் புத்தகத்தில் நியாயப்பிரமாணத்தினுடைய நிலை என்ன என்பதைப் பற்றிய வாக்குவாதம் எழுகிறது. கிறிஸ்தவ நம்பிக்கையில் நியாயப்பிரமாணத்தின், அதாவது திருச்சட் டத்தின், நிலை என்ன என்ற கேள்வி எழுகிறது. அதற்குப் பவுல் தருகிற முக்கியமான பதில் நியாயப் பிரமாணத்தைப்பற்றியதல்ல. "என்னில் அன்புகூர்ந்து, எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ னுடைய குமாரன்மேல் என்னுடைய நம்பிக்கையும், என்னுடைய அன்பும் எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கை தீர்மானிக்கப்படுகிறது," என்று கூறுகிறார். கிறிஸ் தவ வாழ்க்கையிலே, "இதைச் செய்யலாமா, அதைச் செய்யலாமா? இப்படி உடுத்தலாமா? அப்படி உடுத்தலாமா? இப்படிப் பேசலாமா? அப்படிப் பேசலாமா? இதை வாங்கலாமா? அதை விற்கலாமா?" என்று ஆயிரக்கணக்கான கேள்விகளை மக்கள் எழுப்புவார்கள். எல்லாக் கேள்விகளுக்கும் நாம் தரு கிற முதல் பதில்: என்னில் அன்புகூர்ந்த தேவனுடைய குமாரனோடு உள்ள உறவை அது எப்படித் தீர்மானிக்கிறது? இந்தச் சிந்தனையோ, இந்தச் சொல்லோ, இந்தச் செயலோ, இந்த மனப் பாங்கோ, இந்த நடவடிக்கையோ என்னில் அன்புகூர்ந்த தேவனுடைய குமாரனோடுள்ள உறவை அது பாதிக் கிறதா, உடைக்கிறதா அல்லது அந்த உறவை அது கட்டியெழுப்புகிறதா?

### 1. இயேசுகிறிஸ்துவின்மேல் அன்புகூருவது

"*நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்போடு அன்புகூருகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக*" (எபே. 6:24). கிறிஸ்தவ வாழ்க்கையினுடைய மையம் நம்முடைய கர்த்த ராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் நாம் கொண்டுள்ள அழியாத அன்பு. சகோதரரே, நம்முடைய கிறிஸ் தவ வாழ்க்கையிலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் இது தீர்வைத் தருமா என்றால் இது மையமாக இருந்தால் தீர்வுகளை நாம் கண்டுபிடிப்பது சுலபமாக இருக்கும். நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புகூருவது நமக்கு மையமாக இல்லை என்றால், இந்த நபரோடு எனக்கு ஒரு அன்பின் உறவு இல்லை என்றால், அது சாத்தியம் இல்லை.

அவர் எங்கேயோ இருக்கிறார் என்பதல்ல. அவர் இன்றைக்கு உயிர்வாழ்கிற நபர்; என்னோடு தொடர்பு கொள்கிற ஒரு நபர்; என்னோடு கலந்துறவாடுகிற ஒரு நபர். இந்த நபரோடு என்னுடைய உறவு எப்படி இருக்கிறது என்பதைப்பற்றிய உணர்வு இருந்தால் எல்லாப் பிரச்சினைகளுக்கும், சிக்கல்களுக்கும் தீர்வுகளைக் கண்டுபிடிப்பது எளிதாக இருக்கும். 1 கொரிந்தியர் 16:22இல் "ஒருவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமல்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" என்று பவுல் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராதவர்களைப்பற்றி எதிர்மறை யாகப் பேசுகிறார்.

ஆகவே கிறிஸ்தவ நம்பிக்கை என்பது "உங்களுடைய உபதேசம் என்ன? உங்களுடைய பழக்கங்கள் என்ன?" என்பதைப்பற்றியதல்ல. அவைகளெல்லாம் பொருளற்றவை என்று நான் சொல்லவில்லை. இந்த மையமான காரியத்தை நாம் விட்டுவிட்டால் "உங்களுடைய உபதேசம் என்ன? உங்களுடைய பழக்கங்கள் என்ன? உங்களுடைய மற்ற காரியங்கள் என்ன?" என்பவைகளெல்லாம் வெறுமனே பயனற்றவைகளாக இருக்கும்.

### 2. கிறிஸ்துவை அறிவது, கிறிஸ்து எல்லாமுமாவது

இரண்டாவது குறிப்பு, கிறிஸ்துவை அறிவது அல்லது கிறிஸ்து எல்லாமுமாவது. கொலோசெயருக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதின முழுப் புத்தகமும் இதைப்பற்றிப் பேசுகிறது. கொலோசெயர்கள் கிறிஸ்துவுக்கு ஒப்பாக, ஈடாக, இணையாக ஒரு அமைப்புமுறையை உருவாக்கத் தொடங்கிவிட்டார்கள். தேவனுடைய மக்கள் பெரும்பாலானவர்கள் ஒரு அமைப்புமுறையைத்தான் கிறிஸ்தவ வாழ்க்கை என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த அமைப்புமுறைக்கு அவர்கள் ஒத்து வாழும்போது அவர்கள் அதைக் கிறிஸ்தவ வாழ்க்கை என்று நினைக்கின்றார்கள். அந்த அமைப்புமுறையோடு அவர்கள் ஒத்து வாழவில்லையென்றால் அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கை வாழவில்லை என்று நினைக்கின்றார்கள்.

கிறிஸ்து எல்லாவற்றிற்கும் முதலாக இருக்க வேண்டும்; கிறிஸ்து முதன்மையாக இருக்க வேண்டும் என்று கொலோசெயர் 1:17, 18இல் வாசிக்கிறோம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் கிறிஸ்து மையமாக இருக்க வேண்டும், கிறிஸ்து தலையாக இருக்க வேண்டும். தேவனுடைய மக்கள் எல்லா ருடைய வாழ்க்கையிலும் கிறிஸ்து இருக்கிறார். ஆனால், கிறிஸ்து இன்னும் முதன்மையும், மையமும், தலையுமான இடத்திற்கு வரவில்லை. அதற்கு ஒரு கடும் போராட்டமே இருக்கிறது.

"என்னுடைய வாழ்க்கையிலே கிறிஸ்து இருக்கிறார்," என்று தேவனுடைய மக்கள் மிகவும் திருப்தியாகி விடுகிறார்கள். அந்த வாலிபன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் கேட்டதுபோல "என்னிடத் தில் என்ன தவறு உண்டு? என்னிடத்தில் இன்னும் என்ன குறை உண்டு?" என்று நாம் கேட்கிறோம். நாமும் அந்த வாலிபனைப்போல் ஒரு நீண்ட பட்டியலைச் சொல்லி "என்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கை யிலே நான் இப்படி இருக்கிறேன்; இதைச் செய்கிறேன்; அதைச் செய்கிறேன். என்னிடத்தில் இன்னும் என்ன குறை உண்டு?" என்று நினைக்கலாம். ஒருவேளை நாம் மற்றவர்களிடத்தில் அப்படி கேட்காமல் இருக்கலாம். ஆனால், இந்த மனப்பாங்கு தேவனுடைய மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது.

கிறிஸ்து என்னுடைய வாழ்க்கையில் முதன்மையும், மையமும், தலையுமான இடத்திற்கு வரவேண்டும் என்பது பிதாவினுடைய நோக்கம். ஆனால், பல சமயங்களிலே கிறிஸ்துவோடுகூட பல்வேறு காரியங் களை நாம் முக்கியத்துவப்படுத்துகிறோம்.

கொலோசெயர் 2:8, 18 ஆகிய வசனங்களிலே தலையைப் பற்றிக்கொள்ளாதவர்களுடைய நிலைமை யைப்பற்றி பவுல் பேசுகிறார். "*லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங் களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும், உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல*" (கொலோ. 2:8). It is not according to Christ. தமிழில் அதன் அர்த்தம் கொஞ்சம் தெளிவாக இல்லை. நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்து இருக்கிறார். ஆனால், நம்முடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளும் கிறிஸ் துவுக்கு ஏற்றவாறு இல்லை. தேவனுடைய நோக்கம் நாம் எந்த இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூரு கிறோமோ அவரை நம்முடைய அனுபவ வாழ்க்கையில் அறிந்து, நம்முடைய அனுபவத்தில் அவர் நமக்கு எல்லாமுமாக மாற வேண்டும். அனுபவத்தில், நம்முடைய வாழ்க்கை அனுபவத்தில், அவர் நமக்கு எல்லாமுமாக மாற வேண்டும். அப்போது கிறிஸ்து அவருக்குரிய தலையும், முதன்மையும், மையமுமான இடத்திற்கு வருகிறார்.

### 3. கிறிஸ்துவை வெளியாக்குவது

மூன்றாவது, கிறிஸ்துவை வெளியாக்குவது. தேவனுடைய மக்களுடைய அழைப்பு, நாம் கிறிஸ்துவின் மேல் அன்புகூருவது. கிறிஸ்துவை அனுபவத்தில் அறிவது. இதன்மூலமாக, ஒரு கூட்டம் மக்கள்மூல மாக கிறிஸ்து இந்த உலகத்திலே வெளியாக்கப்பட வேண்டும். ஆனால், பல வேளைகளிலே தேவ னுடைய மக்கள்மூலமாக கிறிஸ்து வெளியாக்கப்படுவது இல்லை. எப்போதுமே கிறிஸ்துவை மையப் படுத்துவதற்கு அல்லது முதன்மைப்படுத்துவதற்கு எதிராக சாத்தான் செய்கிற சில வேலைகள் உண்டு.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யோவானையும், யாக்கோபையும், பேதுருவையும் கூட்டிக்கொண்டு போய் மலையின்மேல் மறுரூபமாகிறார். அப்பொழுது எலியாவும், மோசேயும் அவரோடு பேசுகிறவர் கள்போல் காணப்பட்டார்கள். "ஆண்டவரே, நாம் இங்கேயே இருந்துவிடுவது நல்லது. உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக நாம் மூன்று கூடாரங்களை அமைக்கலாம்," என்று பேதுரு சொல்கின்றார். இன்னும் அவர் பேசிக்கொண்டிருக்கும்போதே வானத்தி லிருந்து ஒரு சத்தம் உண்டாகி, "இவர் என் நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன்," என்று சொல்லிற்று. இதைப்பற்றி ஒரு சகோதரன் என்ன சொல்லுகிறார் தெரியுமா? பேதுரு பேசிக்கொண் டிருக்கும்போதே வானத்திலிருந்து உண்டான சத்தம் எதைக் குறிக்கிறதென்றால் பேதுரு பேசியது ஏறக்

குறைய ஒரு உளறலைப்போல் இருக்கிறது என்றும், அவனுடைய உளறலைத் தடுத்தி நிறுத்தி, தேவன் தம் குமாரனுக்குச் செவிகொடுக்கச் சொன்னதுபோலவும் இருக்கிறது என்று சொல்லுகிறார்.

இயேசுவுக்கு ஒரு கூடாரம், கூடவே எலியாவுக்கு ஒரு கூடாரம், மோசேக்கு ஒரு கூடாரம். இயேசுவுக்கு ஒரு கூடாரமே இல்லையென்றால் "இது இயேசுகிறிஸ்துவுக்குரியதே இல்லை. இந்த இடத்தில், இந்த அமைப்பிலே, கிறிஸ்து இல்லை," என்று வெளிப்படையாய்த் தெரிந்துகொள்வோம். ஆனால், தேவ னுடைய எதிரி அப்படிச் செய்யமாட்டான். முதலாவது அவருக்கு ஒரு கூடாரத்தைச் செய்துவிடுவோம். ஆனால் அவருக்கு மைய இடமும், முதன்மை இடமும் கிடைத்துவிடக்கூடாது என்பதற்காக இன்னொரு கூடாரம் எலியாவுக்கும், இன்னொரு கூடாரம் மோசேக்கும் எழுப்பிவிடுவோம். இதைத் தேவன் அங்கீ கரிக்கவில்லை. நாம் அமைப்புமுறை என்று சொல்வது இதுதான். கிறிஸ்து கூட்டல் இன்னும் வேறு பல காரியங்கள். அங்கு கிறிஸ்து இருப்பார். நாம் கிறிஸ்துவையும் வைத்துக்கொண்டிருப்போம். கிறிஸ்துவோடுகூட வேறு சில கூடாரங்களையும் வைத்துக்கொண்டிருப்போம். நீங்கள் எலியாவினுடைய கூடாரத்தை அல்லது மோசேயினுடைய கூடாரத்தைத் தொட்டுப்பாருங்கள். அவர்கள் துடித்துப் போய் விடுவார்கள்.

ஒரு C.S.I சகோதரன், "இயேசுவே சொன்னால்கூட என்னுடைய இந்த C.S.I சபையை அல்லது ரோமன் கத்தோலிக்க சபையைவிட்டு நான் போகமாட்டேன்," என்று சொன்னார். அவர் C.S.I சபையைவிட்:டு அல்லது ரோமன் கத்தோலிக்க சபையைவிட்டு வெளியே போகமாட்டேன் என்று சொன்னதிலே எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால், "இயேசுவே சொன்னாலும் இந்த சபையை விட்டு வெளியே போகமாட்டேன்," என்று சொன்ன வார்த்தையை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. இயேசுவே சொன் னால்கூட இந்த எலியாவின் கூடாரத்தையும் மோசேயின் கூடாரத்தையும் இவர்கள் தகர்க்கமாட்டார்கள்.

இன்னொரு எடுத்துக்காட்டைப் பழைய ஏற்பாட்டில் யாத்திராகமம் 21:8, 9இல் பார்க்கிறோம். இஸ்ரயேல் மக்கள் வனாந்தரத்திலே சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டு சாகக்கிடக்கின்றார்கள். அவர்கள் மோசேயினிடத் தில் முறையிடும்போது மோசே தேவனிடத்தில் கேட்டு ஒரு உபாயத்தைச் செய்கிறார். அது என்ன வென்றால் "ஒரு வெண்கல சர்ப்பத்தைக் கோலிலே உயர்த் துங்கள். யாராவது சர்ப்பத்தினால் கடிக்கப் பட்டால் அவன் இந்த வெண்கல சர்ப்பத்தை நோக்கிப் பார்க்க வேண்டும். அப்பொழுது அவன் உயிர் பிழைப்பான்."

யோவான் நற்செய்தியில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்மை அந்த வெண்கல சர்ப்பத்திற்கு ஒப் பிட்டுச் சொல்கிறார். எப்படி வெண்கல சர்ப்பம் வனாந்தரத்திலே மோசேயினால் உயர்த்தப்பட்டதோ அதுபோல மனிதகுமாரனும் உயர்த்தப்பட வேண்டும். இந்த மனித குமாரனை நோக்கிப் பார்க்கிறவர்கள் பிழைப்பார்கள் (யோவான் 3:14, 15) என்பதற்கு அவர் உவமையாகச் சொல்கிறார். ஆகவே, வெண்கல சர்ப்பத்தை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவத்தைச் சுமக்கிற ஒரு காரியத்திற்கு ஒரு படமாக, ஒரு சித்திரமாக, தேவனே வைக்கிறார்.

ஆனால், நாளடைவிலே இஸ்ரயேல் மக்கள் அந்த வெண்கல சர்ப்பத்தை வழிபட ஆரம்பித்துவிட் டார்கள். அதற்கு ஒரு பலிபீடம் கட்டி, பலிசெலுத்தி அதற்கு நிகுஸ்தான் கோயில் என்று பேரிட்டார்கள் (2 இரா. 18:4). வெண்கல சர்ப்பத்தைத் தேவன் நல்ல நோக்கத்தோடு கொடுக்கிறார். ஆனால், தேவன் தந்ததையே வைத்து ஒரு அமைப்புமுறையை உண்டாக்கிவிட வேண்டும் என்பது மனிதனுடைய சுபாவம். இயேசுகிறிஸ்துவோடுகூட ஒரு அமைப்புமுறை. ஆந்த வெண்கல சர்ப்பத்திற்கு ஒரு பலிபீடம் கட்டி, பலியிட்டு அதை ஒரு கடவுளாகக் கும்பிட்டார்கள். எசேக்கியா என்ற இராஜா மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கல சர்ப்பத்தை உடைத்துப்போட்டான். அவன் அந்தக் கோவிலையே இடித்துத் தரைமட்டமாக்கினான். எல்லா உயர்ந்த மேடைகளையும் இடிக்கும்போது இஸ்ரயேல் மக்கள் நிகுஸ்தான் என்று கும்பிட்டுக் கொண்டிருக்கிற வெண்கல சர்ப்பத்தையும் அவன் இடித்தான்.

இதோடு என்னுடைய முதல் குறிப்பு முடிகிறது. கிறிஸ்துவும், அமைப்புமுறையும். தேவனுடைய மக்க ளாகிய நாம் கிறிஸ்துவை விடவில்லை. ஆனால், நாம் கிறிஸ்துவுக்குக் கொடுக்கவேண்டிய மைய இடத்தை, முதன்மை இடத்தை அல்லது தலையினுடைய இடத்தைக் கொடுக்கவில்லை; இன்னும் பல கூடாரங்களும், பல நிகுஸ்தான்களும் நம்முடைய வாழ்க்கையிலே இருக்கலாம். அவைகளை நாம் இனங்கண்டு எசேக்கியா இராஜா செய்ததுபோல அந்த மேடைகளையெல்லாம் நாம் தகர்க்க வேண்டும்.

## II. ஆவியானவரும், சத்தியமும்

இரண்டாவது குறிப்பு, ஆவியானவரும் சத்தியமும். இதில் நான் மூன்று உபகுறிப்புகளைச் சொல் கிறேன். முதல் உபகுறிப்பு, **கிறிஸ்துவை வெளிப்படுத்துவது**. இரண்டாவது, **கிறிஸ்துவை மெய்யாக்கு**

**வது**. மூன்றாவது, **கிறிஸ்துவை உருவாக்குவது**. கிறிஸ்துவை வெளிப்படுத்துவது, கிறிஸ்துவை மெய்யாக்குவது, கிறிஸ்துவை உருவாக்குவது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை நாம் எப்படி அறிவது? தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தின்மூலமாகத்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை அறிய முடியும்.

## 1. கிறிஸ்துவை வெளிப்படுத்துவது

நான் சிறுவனாக இருந்தபோது சில பத்திரிகைகளிலே வெளிவந்த ஒரு படத்தைப் பார்த்திருக்கிறேன். அந்தப் படத்தைப் பார்க்கும்போது கோடுகள் மட்டும்தான் தெரியும். அங்கும் இங்கும் கிறுக்கி வைத்தது போல இருக்கும். ஒன்றுமே இருக்காது. ஆனால், "கொஞ்ச நேரம் நீங்கள் இந்தப் படத்தை உன்னிப்பாகப் பார்த்தால் இங்கே ஒரு மாளிகையையும், மாளிகையின் நடுவிலே ஒரு சிங்கத்தையும் பார்ப்பீர்கள்," என்று போட்டிருப்பார்கள். கொஞ்சம் நேரம் ஊன்றிப்பார்த்தால் உண்மையாகவே அது ஒரு முப்பரிமாண மாளிகையைப்போலவும், அந்த மாளிகையின் நடுவிலே ஒரு சிங்கம் இருப்பதுபோலவும் தெரியும்.

வேதாகமத்தை நான் அப்படிப்பட்ட புத்தகமாகச் சொல்லவில்லை. ஆனாலும்கூட ஊன்றிப்பார்த்தால்தான் இந்தப் புத்தகத்திலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப் பார்க்க முடியும்.

அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தை எழுதியிருக்கிற ஒரு புத்தகத்தில் ஜார்ஜ் வாஷிங்டனுடைய உருவத்தையும் வரைந்திருக்கின்றார்களாம். அந்தப் புத்தகத்தைப் பக்கத்தில் நின்று வாசித்தால் அரசியலமைப்பு சட்டத்தைத்தான் வாசிப்பார்கள். கொஞ்சம் தூரத்தில் போய்ப் பார்த்தால் அதில் ஜார்ஜ் வாஷிங்டனுடைய முகம் தெரியுமாம்.

இந்த வேதப் புத்தகத்தை ஒருவிதமாகப் பார்த்தால் வெறுமனே கருப்பு வெள்ளை எழுத்துக்கள், சத்தியங்கள், தெரியும். ஆனால், வேறொரு விதமாகப் பார்த்தால் இந்த வேதப் பக்கங்களிலே கிறிஸ்து தென்படுவார். ஆனால், தேவனுடைய மக்கள் எல்லாருக்கும் இந்த வேதப் பக்கங்களிலே கிறிஸ்து தென்படுவதில்லை. சத்தியம் என்ற பெயரிலே ஏதோவொரு விதத்திலே அவர்கள் அறிவைப் பெறுகிறார்கள். அந்த அறிவின் அடிப்படையிலே அவர்கள் சண்டைபோடுவார்கள், போராடுவார்கள். தேவனுடைய மற்ற மக்களோடு உறவாட மாட்டார்கள். '

'நீங்கள் அந்நிய பாஷை பேசுவீர்களா?" என்று ஒரு ஆவிக்குரிய சகோதரி என்னிடத்தில் கேட்டார்கள். நான் அப்படி இப்படி என்று கொஞ்சம் பதில் சொல்லிப் பார்த்தேன். அவர்கள் என்னை விடவில்லை. "உண்டு, இல்லை என்று பதில்சொல்லுங்கள்," என்று சொன்னார்கள். "பேசி ரொம்ப நாளாயிற்று," என்று நான் சொன்னேன். அவர்கள் அதோடு என்னுடைய உறவையே அறுத்துக்கொண்டார்கள். நான் அதை "சரி தவறு என்றோ, நல்லது கெட்டது என்றோ, பயனுள்ளது பயனற்றது என்றோ சொல்லவில்லை. பேசி வெகுநாட்களாயிற்று," என்று சொன்னதால், "நீங்கள் பரிசுத்த ஆவியை மறுதலிக்கிறீர்கள். உங்களோடு நான் எந்த உறவையும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை," என்று சொல்லிவிட்டார்கள். இப்போது காலங்கள் உருண்டோடிவிட்டன. அவர்களும் மறுஉருவாகிவிட்டார்கள். இப்போது அதைக்குறித்து நினைப்பதில்லை.

வேதப் பக்கங்களிலே கிறிஸ்துவைக் காண வேண்டும். அதைப் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே காண்பிக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு இருதயத்தை சங்கீதம் 51:6இல் நாம் வாசிக்கிறோம். "*உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர். அந்தக்கரணத்திலே ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.*" வேதத்தை ஆராய்ந்து படிக்கிற விதத்திலே அப்படிப்பட்ட ஒரு இருதயப் பயிற்சி இல்லையென்றால் வேதத்தின் பக்கங்களிலிருந்து வெறுமனே கேள்விகளையும், பதில்களையும்தான் பெறுவோமேதவிர கிறிஸ்துவை நாம் பெற முடியாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எம்மாவுக்குச் சென்றுகொண்டிருந்த தம்முடைய இரண்டு சீடர்களைச் சந்தித்து, "*மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்*" (லூக். 24:27) என்று வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஒருமுறை யூதர்களிடத்தில், "*நீங்கள் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கிறீர்கள்.*" (தமிழில் ஆராய்ந்து பாருங்கள் என்று இருக்கும்). "*அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக்குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை,*" (யோவான் 5:39-40) என்று சொன்னார். இவ்வாறு, வேதவாக்கியங்கள் ஆண்டவராகிய இயேசுவையே வெளிக்காண்பிக்கின்றன.

### 2. கிறிஸ்துவை மெய்யாக்குவது

இரண்டாவது உபகுறிப்பு, நம்முடைய அனுபவ வாழ்க்கையிலே கிறிஸ்துவை மெய்யாக்குவதே பரிசுத்த ஆவியானவருடைய இன்னொரு வேலை. இதை நான் வலியுறுத்திச் சொல்ல வேண்டும். வாழ்க்கைச் சூழ்நிலைகளிலே நாம் கிறிஸ்துவால் வாழ்கிறோமா என்பதுதான் காரியம். வேதப் பக்கங்களிலிருந்து வாக்குவாதம் பண்ணுவது காரியம் இல்லை. அதற்கு அர்த்தம் சத்தியத்தை நாம் தாறுமாறாக ஏனோதானோவென்று பயன்படுத்தலாம், புரிந்துகொள்ளலாம், என்பதல்ல. ஆனால், ஒரு வாழ்க்கைச் சூழ்நிலையிலே வாழ்வதற்கு வேறு வழியில்லை; ஆனால், நான் கிறிஸ்துவை அறிந்ததால், கிறிஸ்து இந்தச் சூழ்நிலைக்குப் போதுமானவர் என்பதை நான் கண்டதால், அவரால் வாழ்வதுதான் உயிருள்ள சத்தியம், உயிர்த்துடிப்புள்ள சத்தியம். *"சத்திய ஆவியானவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை வழிநடத்துவார். அவர் என்னுடையதிலிருந்து அறிவிப்பதினால் அவர் என்னை மகிமைப்படுத்துவார்"* (யோவான் 16:13, 14) என்று இயேசு கூறினார். கிறிஸ்துவை நமக்கு நம்முடைய அனுபவத்தில் மெய்யாக்குவதுதான் பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தைக்கொண்டு செய்கிற ஒரு பெரிய வேலை. கிறிஸ்துவைப்பற்றி எழுதப்பட்ட உண்மைகள் பல உண்டு. ஆனால், எழுதப்பட்ட உண்மைகளில் எவ்வளவு என்னுடைய வாழ்க்கையில் உண்மையாயிருக்கிறது என்பதைப் பரிசுத்த ஆவியானவர் செய்கிறார்.

### 3. கிறிஸ்துவை உருவாக்குவது

மூன்றாவது உபகுறிப்பு, கிறிஸ்துவை உருவாக்குவது. 2 கொரிந்தியர் 3:17, 18 நமக்குத் தெரியும். இந்த வேதப் பக்கங்களை நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலையில் வாசிக்கும்போது, ஆவியானவர் நம்மை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சாயலுக்கு ஒத்த சாயலாக மறுவுருவாக்குகிறார். முகிமையின் ஒரு படியிலிருந்து இன்னொரு படிக்குச் சிறிது சிறிதாக, சிறிது சிறிதாக பரிசுத்த ஆவியானவர் சத்தியத்தைக்கொண்டு மறுவுருவாக்குகிறார் என்று 2 கொரிந்தியர் 3ஆம் அதிகாரம் முழுவதும் சொல்கிறது. இந்த வேதத்தை நாம் நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளிலே வாசிக்கும்போது, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு மாதமும் சிறிதளவாவது நம்முடைய குணம் கிறிஸ்துவின் குணத்திற்கு ஒத்ததாக மாற்றப்படுகிறது.

எப்படி சத்தியத்தைப் போலியாகப் பயன்படுத்தலாம் என்பதற்கு யோசுவா 6ஆம் அதிகாரத்திலிருந்து நான் ஒரு எடுத்துக்காட்டுச் சொல்கிறேன். தேவன் இஸ்ரயேல் மக்களிடம், "நீங்கள் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு ஏழு நாட்கள் சுற்றி வரவேண்டும். முதல் ஆறுநாட்கள் ஒருதடவை சுற்றி வர வேண்டும். ஏழாம் நாள் ஏழுமுறை சுற்றி வர வேண்டும். அப்பொழுது அந்த எரிகோவினுடைய சுவர்கள் இடிந்துவிழும், எரிசோவை முறியடிப்பீர்கள்," என்று சொன்னார். எவ்வளவு எளிமையான உபாயம்! அவர்கள் தங்கள் கத்தியினாலோ அல்லது இரத்தம் சிந்தியோ எரிகோவை வெல்லவில்லை. தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை அவர்கள் சுமந்து, சுற்றி வந்ததால் எரிகோவை வென்றார்கள். உடன்படிக்கைப் பெட்டியை ஆசாரியர்கள்கூடத் தொட முடியாது. இரண்டு தோள்களில்தான் அவர்கள் சுமக்க வேண்டும். உடன்படிக்கைப் பெட்டி அவ்வளவு பரிசுத்தமானது.

1 சாமுவேல் 4ஆம் அதிகாரத்திலே ஒரு சம்பவம் இருக்கிறது. பெலிஸ்தரோடு இஸ்ரயேல் மக்கள் போரிட்டபோது நான்காயிரம்பேர் செத்துப்போகின்றார்கள். ஆகவே, இஸ்ரயேலுடைய மூப்பர்கள் கூடி வந்து ஆலோசனை பண்ணுகின்றார்கள். அடுத்த நாள் போருக்கு "இனிமேல் நாம் போனால் போதாது. எப்படி நம்முடைய முன்னோர்கள் உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துகொண்டு போாக்களத்திற்குப் போய் எரிகோவை முறியடித்தார்களோ, அதுபோல நாளைக்கு நாம் உடன்படிக்கைப் பெட்டியை சுமந்துகொண்டு போர்களத்திற்கு போவோம். நாம் இந்தமுறை வெல்வோம்," என்றார்கள். உடன்படிக்கைப் பெட்டியோடு அதைப் பாதுகாக்கின்ற ஆசாரியர்களாகிய ஏலியின் குமாரராகிய ஓப்னியும், பினெகாசும் வருகின்றார்கள். உடன்படிக்கைப் பெட்டி போனபோது போர்க்களத்திலே பெரிய ஆரவாரம் உண்டாயிற்று. ஆரவாரத்தைக் கேட்டு பெலிஸ்தியர்கள் கொஞ்சம் நடுங்கிவிடுகிறார்கள். ஆனால், அந்த நாளிலே முப்பதாயிரம் இஸ்ரயேலர்கள் செத்தார்கள் என்று எழுதியிருக்கிறது.

உடன்படிக்கைப் பெட்டியை, "நாம் இப்படிச் சுமந்துகொண்டு, அப்படிச் சுற்றிப் போனால் நமக்கு வெற்றி கிடைக்கும் என்று யோசுவாவினுடைய புத்தகத்திலே எழுதி வைத்திருக்கிறதே!" இதுதான் தேவனுடைய மக்கள் வேதத்திலிருந்து சத்தியத்தைப் பெறுகிற முறை. எல்லாரும் என்று சொல்லவில்லை; பெரும்பாலும் தேவனுடைய மக்கள் வேதத்திலிருந்து இப்படித்தான் சத்தியத்தைப் பெறுகிறார்கள்.

உடன்படிக்கைப் பெட்டியிலே வல்லமை இருக்கிறதா, இல்லையா? உடன்படிக்கைப் பெட்டியிலே எந்த வல்லமையும் இல்லை. உடன்படிக்கைப் பெட்டியினுடைய வல்லமை அதைச் சுமக்கிற தேவனுடைய

மக்களிடமிருந்து வருகிறது. உடன்படிக்கைப் பெட்டி என்பது ஒரு உண்மையைக் குறிக்கின்ற நிழல். எந்த அளவுக்கு இந்த மக்களிடையே இயேசுகிறிஸ்துவினுடைய சாட்சி விளங்குகிறது; எந்த அளவுக்கு இயேசுகிறிஸ்துவினுடைய குணம் இவர்களுக்குள் உருவாகியிருக்கிறது; எந்த அளவுக்கு இவர்கள் தங்கள் வாழ்க்கையிலே இயேசுகிறிஸ்துவால் வாழ்கிறார்கள்; எந்த அளவுக்கு இயேசுகிறிஸ்துவின் சாட்சி இவர்களிடத்தில் இருக்கிறது என்பதுதான் உடன்படிக்கைப் பெட்டியேதவிர பெட்டி ஒரு காரியம் இல்லை.

ஆகவே, ஆவியானவரும் சத்தியமும். ஆவியானவர் இல்லாத ஒரு சத்தியம் உண்டு. அந்த சத்தியம் நம்மை உயிர்ப்பிக்காது அல்லது பரம காரியங்களை நாம் பெறுவதற்கு நமக்கு உதவி செய்யாது.

இஸ்ரயேல் மக்கள் தோற்றுப்போனது மட்டுமல்ல. அவர்களுடைய உடன்படிக்கைப் பெட்டியை பெலிஸ் தர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள். கொஞ்ச நாள் கழித்து அதைத் திருப்பிக்கொடுத்தார்கள். ஆனால், அந்தப் பெட்டி சீலோவிலே இருந்த கர்த்தருடைய கூடாரத்திற்குப் போகவில்லை; அது ஒரு வீட்டிலேயே தங்கிவிட்டது. கூடாரம் சீலோவிலே இருந்தது. கூடாரத்திலே பெட்டி இல்லாதபோதும் மக்கள் தொடர்ந்து பலியிட்டுக்கொண்டிருந்தார்கள், வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். உடன்படிக்கைப் பெட்டி இருந்தால்தான் அதற்குப் பெயர் கர்த்தருடைய கூடாரம். உடன்படிக்கைப் பெட்டி இல்லா விட்டாலும்கூட நம்முடைய பழக்க வழக்கத்தின் காரணமாக நாம் அதைத் தொடர்ந்து செய்து கொண் டிருப்போம்.

நான் ஒரு ரோமன் கத்தோலிக்கனாக இருந்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன். நான் இயேசுவை விசுவாசிக்காத காலத்திலும்கூட ஞாயிற்றுக்கிழமை என்றால் கோயிலுக்குப் போக வேண்டும், பூசைக்குப் போக வேண்டும், கால தாமதமாகப் போனாலும் பரவாயில்லை, கோயிலுக்கு வெளியே இருந்தாலும் பரவாயில்லை, பூசைக்குப் போக வேண்டும் என்ற பழக்கம் இருந்தது. காரணம் என்ன? அது நம்முடைய சீலோ. அதில் உண்மை இருந்தாலும் சரி, உண்மை இல்லாவிட்டாலும் பரவா யில்லை, உயிர்த்துடிப்பு இருந்தாலும் சரி, உயிர்த்துடிப்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை, அது நம் முடைய பழக்கவழக்கம். அதை யாராவது தொட்டுவிட்டால் போதும், நாம் சீறியெழுந்துவிடுவோம். “அங்கு உடன்படிக்கைப் பெட்டிதான் இல்லையே! எதற்காக இந்தக் கூடாரத்திற்குள் போய் வழிபடு கிறாய்?” என்று யாராவது கேட்டால், “அது எனக்குத் தெரியாது. ஞாயிற்றுக்கிழமை கோயிலுக்குப் போக வேண்டும். இது என்னுடைய முன்னோர்கள், எங்களுடைய பெற்றோர்கள் வழிபட்டு வந்த கூடா ரம். அதனால் அது வெற்றுக் கூடாரமாக இருந்தாலும் சரி அல்லது பெட்டி இருக்கிற கூடாரமாக இருந்தாலும் சரி. நாங்கள் அங்கு போய் வழிபட்டே தீர்வோம்,” என்பது நம் மனப்பாங்கு. ஆகவே, இது ஒரு போலியாக மாறிவிடும்.

## III. சபையும், நிறுவனமும்

மூன்றாவது பெரிய குறிப்பு, சபையும், நிறுவனமும். இதிலே ஒரு மூன்று உபகுறிப்புகள். முதல் உபகுறிப்பு, **கிறிஸ்துவை மையமாகக்கொண்டு உறவாடல்**. இரண்டாவது, **கிறிஸ்துவைப் பகிர்வது**. மூன்றாவது, **கிறிஸ்துவின் பிரசன்னம்**.

நான் என்னுடைய நண்பரான பாஸ்டர் ஒருவரைச் சந்தித்தேன். அவர், “கூடுகட்டினால் புறாக்கள் வரும்,” என்று என்னிடம் சொன்னார். “தேவனுடைய மக்கள் கூடிவர வேண்டுமென்றால் ஒரு கட்டி டத்தைக் கட்ட வேண்டும்,” என்பதுதான் அவர் சொன்னதின் பொருள். “நல்ல மெயின் ரோட்டில் ஒரு கட்டிடத்தைக் கட்டி air condition hall, soul turning music, inspiring messages, contemporary fellowship என்று நீங்கள் போட்டீர்களென்றால் தேவனுடைய மக்கள் கூடுவார்கள். நீங்கள் நடக்கிறதுபோல நடந் தால் இதேபோல் ஐம்பது பேர்தான் இருப்பீர்கள்,” என்று தேவனுடைய மக்கள் என்னை எச்சரித் திருக்கிறார்கள்.

25 வருடங்களுக்குமுன்பு A.W.Tozer என்ற பரிசுத்தவானின் புத்தகங்களை நான் படித்தபோது இந்த soul turning music, inspiring messagesபற்றி அவர் என்ன சொன்னாரோ அதை மீண்டும் நான் 25 வரு டங்கள் கழித்துப் படித்துப்பார்க்கிறேன். அன்றைக்கு அது எப்படிப் பசுமையாக இருந்ததோ, அதே போல் அது இன்றைக்கும் எனக்குப் பசுமையாக இருக்கிறது. “முன்பு அவர்கள் தியேட்டரில் பாடி னார்கள். இப்பொழுது அவர்கள் பரிசுத்த ஸ்தலத்தில் பாடுகிறார்கள். அவர்களுடைய மாம்சத்திலே எந்த வேறுபாடும் இல்லை. முந்தி அந்த மாம்சம் திரைப்பட அரங்கில் அல்லது நாடக அரங்கில் வேலை செய்தது. இப்பொழுது அந்த மாம்சம் பரிசுத்த ஸ்தலத்தில் வேலை செய்கிறது. வேலை செய் வது என்னவோ மாம்சந்தான். இடம்தான் மாற்றமேதவிர அதனுடைய தோற்றுவாய், ஊற்று, மூலம்,

மாறவில்லை; அதில் எந்த மாற்றமும் இல்லை," என்பது A.W.Tozer கருத்து. நான் அந்தக் கருத்தோடு ஒத்துப்போகிறேன்.

### 1. கிறிஸ்துவை மையமாகவைத்து உறவாடல்

உண்மையான சபை என்பது தேவனுடைய மக்களிடையே உள்ள உறவாடல். இந்த உலகத்திலே corporates எப்படி வெற்றிகரமான multinational company நடத்துகிறார்களோ, அதுபோல தேவனுடைய மக்கள் சபையை அல்லது ஊழியத்தை ஒரு நிறுவனம்போல நடத்தி வெற்றியும் பெறுகிறார்கள். அவர்கள் வெற்றி பெறக்கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆனால், சபை என்பது தேவ மக்களுடைய குடும்பம். தேவனுடைய மக்கள் எப்படி உறவாடுகிறார்கள் என்பதுதான் அது சபையா இல்லையா என்பதை நிர்ணயிக்கிறது. எண்ணிக்கை அதை நிர்ணயிக்கவில்லை. எண்ணிக்கையை நான் குறைத்து மதிப்பிடவில்லை. தேவன் இந்த உலகத்திலுள்ள எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் வேண்டுமென்று விரும்புகிறார். ஆகவே, எண்ணிக்கையைப் பற்றி நான் குறைத்துச் சொல்லவில்லை. எண்ணிக்கையைக்குறித்து நான் கவலையற்றவனாகவும் இருக்கவில்லை. ஆனால், எண்ணிக்கை ஒரு அளவுகோல் அல்ல.

யூதர்களுக்கும் புறவினத்தாருக்கும் நடுவிலே பகையாக இருந்த நடுச்சுவரைச் சிலுவையில் தகர்த்தார் என்றும், தகர்த்து, உறவாட முடியாத அந்த இரண்டு சாரார்களையும் உறவுபடுத்தினார் என்று எபேசியர் 2ஆம் அதிகாரத்திலே வாசிக்கிறோம். இரண்டு மனிதர்கள், அவர்கள் தேவனுடைய மக்களாக இருந்தாலும், உறவாடுவதற்கு அவர்களுக்கு நடுவிலே பகையாக நடுச்சுவர்கள் உண்டு. கணவன் மனைவியாக இருந்தாலும் நடுச்சுவர்கள் உண்டு. சகோதரர்கள் நடுவிலே நடுச்சுவர்கள் உண்டு. மூத்தவர்கள் இளையவர்கள் நடுவிலே நடுச்சுவர்கள் உண்டு. அதை நாம் கவனிக்காமல் போய்விட்டால் நாளடைவிலே அவைகள் பகையாக மாறிவிடும். முதலாவது ஆரம்பக் கட்டத்திலே அந்த நடுச்சுவர்களை நாம் பொறுத்துக்கொள்வோம், சகித்துக்கொள்வோம், பல்லைக் கடித்துக்கொள்வோம். பிறகு அது வெறுப்பாக, கசப்பாக, கோபமாக, பகையாக மாறிவிடும். நானும் மையம், என்னுடைய சகோதரர்களும் மையம் என்றால் உறவாட முடியாது.

உல மக்கள் உறவாடுவதற்கும், தேவனுடைய மக்கள் உறவாடுவதற்கும் இடையே பெரிய வேறுபாடு உண்டு. அது என்னவென்றால் தேவனுடைய மக்களுடைய உறவாடல்களில் நாம் கிறிஸ்துவை மையமாக வைக்கிறோம். அது எளிமையான காரியம் இல்லை. சொல்வதற்கு ரொம்ப எளிமையானது. நம்முடைய எல்லா உறவாடல்களிலும் கிறிஸ்துவை மையமாகவைத்து உறவாடும்போது சிலுவை நம்மேல் பிரயோகிக்கப்படும்.

### 2. கிறிஸ்துவைப் பகிர்வது

இரண்டாவது குறிப்பு, கிறிஸ்துவைப் பகிர்வது. சபை என்பது நாம் கிறிஸ்துவை ஒருவருக்கொருவர் பகிர்வது, கிறிஸ்துவைப் பொதுவாக்குவது. நம்முடைய எல்லாப் இடைப்பாடுகளில், எல்லாக் கொடுக்கல் வாங்கல்களில், எல்லாப் போக்குவரத்துகளிலே நாம் கிறிஸ்துவைப் பகிர்கிறோம். நாம் ஏன் சபையாக வாழ்கின்றோம்? தனியாக ஒரு தீவிலே அல்லது ஒரு குகையிலே வாழும்போது நாம் கிறிஸ்துவை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ள முடியாது. கிறிஸ்துவை நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும்போது மட்டுமே நாம் ஒரு பெரிய அளவிலே கிறிஸ்துவைக் காண முடியும், வாழ முடியும், அவர் நமக்குள்ளே உருவாக்கப்பட முடியும்.

"நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்," (யோவான் 13:35) என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சொன்னார். நாம் தேவனுடைய மக்கள் என்று எப்படி இந்த உலகம் அறிந்துகொள்ளும்? நான் எதிர்மறையாகப் பல காரியங்களைச் சொல்லலாம். நம்முடைய சபை் பெயரைவைத்து அறிந்துகொள்வார்களா? நம்முடைய உபதேசங்களைவைத்து அறிந்துகொள்வார்களா? நம்முடைய பழக்க வழக்கங்களைவைத்து அறிந்துகொள்வார்களா? தேவனுடைய மக்களாகிய நாம் ஒருவருக்கொருவர் எப்படி அன்புகூர்ந்து வாழ்கிறோம் என்பதைவைத்துத்தான் நாம் இயேசுகிறிஸ்துவின் சீடர்களா இல்லையா என்று இந்த உலகம் அறிந்துகொள்ளும்.

திருவெளிப்பாடு 2:4, 5இல் ஆவியானவர் எபேசுவிலேயுள்ள சபைக்குச் சொல்லும்போது "உன்னை அளப்பதற்கான அளவுகோல் உன்னுடைய அன்பு எப்படி இருக்கிறது என்பதைப் பொறுத்தது," என்று சொல்கிறார். ஆதி அன்பு என்பது அவர்கள் தேவனிடத்தில் வைக்கும் அன்பை மட்டும்தான் குறிக்கிறது என்று சிலர் நினைப்பார்கள். அது அப்படி அல்ல. ஆதி அன்பு ஆண்டவராகிய இயேசுவினிடத்தில் வைத்த அன்பையும் குறிக்கும்; நாம் ஒருவர்மேலொருவர் வைக்கும் அன்பையும் அது குறிக்கும்.

ஆரம்ப நாட்களிலே தேவனுடைய மக்கள் ஒருவரோடொருவர் அன்பாயிருப்பார்கள். சில வருடங்கள் நாம் சேர்ந்து வாழ்ந்தால் ஒருவர்ஒருவருடைய குறைபாடுகள் வெளிவந்துவிடும். அப்போது நாம் ஒருவர்மேலொருவர் அன்பு கூரமுடியுமா என்பதுதான் கேள்வி. புதிதாக இருக்கும்போது அன்புகூரு வோம். ஐந்து வருடம் என்னோரு நீங்கள் பழகினால் என்னுடைய குறைபாடுகள், என்னுடைய பல வீனங்கள் எல்லாம் அம்பலமாகிவிடும். அதன்பிறகு நாம் அன்புகூர்ந்து உண்மையாகவே தேவனுடைய குடும்பமாக வாழ முடியுமா என்பதுதான் அது சபையா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கிறது.

சபையை ஒரு நிறுவனம்போல நடத்தினால் பத்து வருடங்கள் கழித்து நாம் கூட்டாக வாழலாம். ஏனென் றால், "நிறுவனத்திலே இவர் தலைவர், இவர் உபதலைவர். இந்த நிறுவனத்தின் சட்டமைப்பு இது. இதை மீறுகிறவர்கள் நன்மையைப் பெறமாட்டார்கள். இதற்கு ஒத்துவருகிறவர்கள் நன்மையைப் பெறு வார்கள்," என்றால் அது எல்லாரையும் ஒன்றாகக் காத்துக்கொள்ளும். நிறுவனம் இல்லாமல் தேவ னுடைய மக்கள் பகிர்ந்துகொண்டு வாழ முடியுமா என்பது சவால்.

### 3. தேவனுடைய பிரசன்னம்

மூன்றாவது குறிப்பு, தேவனுடைய பிரசன்னம். "அந்நாள்முதல் நகரம் **யேகோவா ஷம்மா** என்னும் பெயர்பெறும்" (எசேக்கியேல் 48:35). அதாவது அந்த நகரத்திலே தேவனுடைய பிரசன்னம் இருக்கும். 1 கொரிந்தியர் 14:24, 25 ஆகிய வாக்கியங்கள் மிக முக்கியமான வசனங்கள். உங்களுடைய கூடுகை சபையா இல்லையா என்பதை உங்களிடையே வருகின்ற கல்லாதவர்களின், புதியவர்களின், இருதயத் தின் யோசனைகள் உண்மையிலேயே வெளியரங்கமானால், உண்மையாகவே தேவன் உங்கள் நடு விலே இருக்கிறார் என்று அவர்கள் முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்துகொண்டால் அது சபை. அதுதான் சபையினுடைய வரையறை. அதுதான் சபையினுடைய இலட்சணம் என்றுகூடச் சொல்லலாம். நம்மிடையே வருகின்றவர்கள், நம்மைத் தொடர்புகொள்கின்றவர்கள், ஏதோவொரு விதத்தில் ஆண்டவ ராகிய இயேசுவின் பிரசன்னத்தைக் காண வேண்டும். அந்தப் பிரசன்னத்தை அவர்கள் காணவில்லை யென்றால்...

சிலர் தீர்க்கதரிசனம் என்ற பெயரில் வரப்போகிற காரியத்தைச் சொல்வார்கள். "மகனே! நீ கலங்காதே. உன்னுடைய இருதயத்திலே ஒரு கவலை இருக்கிறது. இந்த வாரத்தில் கர்த்தர் அந்தக் கவலையைத் தீர்ப்பார்," என்பார்கள். வேறு சிலர் ஒரு புத்தகத்தைப் படித்து, அதிலிருந்து ஒப்பித்துவிட்டு அதுதான் தீர்க்கதரிசனம் என்று சொல்வார்கள். இரண்டுமே தீர்க்கதரிசனம் இல்லை.

கல்லாதவன் ஒருவன், புதியவன் ஒருவன், வரும்போது உண்மையாகவே அந்த இடத்திலே தேவன் இருக்கிறார் என்று அவன் சொல்ல வேண்டும்.

## IV. ஊழியமும், தொழிலும்

நான்காவது குறிப்பு, ஊழியமும், தொழிலும். தேவனுடைய மக்கள் ஊழியம் என்பதை தொழில்முறைப் படுத்தி professional ஆகச் செய்கின்றார்கள். பாடுவதற்கு professional singers. தேவனுடைய வார்த்தை யைப் பேசுவதற்கு professional speakers. அதேபோல் seeker friendly churches. அவர்கள் பேசும்போது அல்லது பாடும்போது அந்த அரங்கம் முழுவதும் இருட்டாக இருக்கிறது. பேசுகிறவர்மேல் மட்டும் வெளிச்சம் விழுகிறது. நான் ஒரு ஊழியக்காரரைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் சென்னை யில் எழும்பூரில் இருக்கிறார். அவரை யாராவது சந்திக்கப் போகும்போது அந்த ஊழியக்காரர் இருக் கிற அறையிலே வெளிச்சம் அவர்மேல் மட்டுமே விழுகிறது. சந்திக்க வந்திருக்கிற சந்திப்பாளர் அந்த அறையில் இருட்டில்தான் இருப்பார். இந்த அமைப்பு வந்திருக்கிறவருக்கு "நான் தாழ்ந்தவன். அவர் உயர்ந்தவர்," என்ற உணர்வைத்தான் ஏற்படுத்தும். It is completely professional. இது நன்மையா தீமையா என்று நான் சொல்லவில்லை. நான் இந்த வழியிலே நடப்பதில்லை. "இது எவ்வளவு வெற்றியுள்ள ஊழியம் பாருங்கள்!" என்று சிலர் சொல்லலாம்.

இரண்டே குறிப்புகள் சொல்லுகிறேன். முதலாவது, **சிலுவை உயிர்த்தெழுதல்மூலமாக விளைவதே ஊழியம்**. இரண்டாவது, **கிறிஸ்துவைப் பரிமாறுவதே ஊழியம்**.

### 1. கிறிஸ்துவைப் பரிமாறுவதே ஊழியம்

இந்த உலகத்திலே தேவனுடைய மக்களாயிருந்தாலும் சரி, தேவனற்ற மக்களாயிருந்தாலும் சரி, கிறிஸ்து அவர்களுடைய வாழ்க்கையிலே இல்லாததால், கிறிஸ்து அவர்களுடைய வாழ்க்கையிலே குறைவுபடுவதால் பல சிக்கல்கள், பல பிரச்சினைகள், பல தாறுமாறுகள் உள்ளன; அவர்களுடைய வாழ்க்கையில் இருளும், மரணமும் சூழ்ந்திருக்கின்றன. தேவனற்ற மக்களிடம் கிறிஸ்து இல்லை.

தேவனுடைய மக்களிடம் கிறிஸ்து இருக்க வேண்டிய இடத்திலே அவர் இல்லை. மையம், முதன்மை, தலை என்கிற இடத்திற்கு அவர்கள் அவரை விடுவதில்லை. அவர்களிடம் கிறிஸ்துவைத்தவிர பல்வேறு கூடாரங்கள் உள்ளன. ஆனால், அவர்கள் "எங்களிடத்தில் என்ன குறை? கிறிஸ்துவுக்கும் ஒரு கூடாரம் இருக்கிறதே," என்று சொல்கிறார்கள். ஊழியம் என்பது கிறிஸ்து இல்லாத, கிறிஸ்து குறைவுபடுகிற ஒரு மனிதனுடைய வாழ்க்கைக்குள் கிறிஸ்துவைக் கொண்டு சென்று, அந்த மனிதனுடைய வாழ்க்கையைச் செப்பனிடுவது, சீர்படுத்துவது, ஆசீர்வதிப்பது. அதுதான் ஊழியம்.

ஆதியாகமத்திலே மெல்கிசெதேக்கு என்ற கதாபாத்திரரம் அதற்கு நல்ல உதாரணம். போர்க்களத்திலிருந்து போரிட்டுச் சோர்ந்து, களைத்து வருகிற ஆபிரகாமை வழியிலே சந்தித்து அப்பமும், திராட்சை ரசமும் கொடுத்து, "வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தராலே நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்," என்று அவர் அவனை ஆசீர்வதிக்கிறார். ஆசீர்வதித்து, அவனை ஆற்றிவிட்டு அவர் அந்த இடத்திலிருந்து மறைந்துபோகிறர். அவர் தோன்றினான், ஆசீர்வதித்தார், மறைந்தார். வெறுமனே தோன்றுவதும், மறைவதுமல்ல ஊழியம். தோன்றி ஆசீர்வதித்துவிட்டு மறைய வேண்டும். ஆசீர்வதிப்பதற்கு நம்மிடத்தில் ஒன்று இருக்க வேண்டும். மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லையென்றால் ஊழியம் செய்வதற்கு ஒன்றுமில்லை என்று பொருள்.

இப்படிக் கிறிஸ்துவைப் பரிமாறுவது எப்படி சாத்தியம்? பாடுவதோ, பேசுவதோ அல்லது ஜெபிப்பதோ கூட கொஞ்சம் பயிற்சி செய்தால் வந்துவிடும். ஆயிரம்முறை பத்து வசனங்களைக் கோர்த்து ஜெபித்தால் ஜெபிப்பது சர்வ சாதாரணமாக, சரளமாக, வந்துவிடும். சில பாஸ்டர்கள் ஜெபிப்பதை நான் கேட்டிருக்கிறேன். "ஆண்டவரே, வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து, ஒளிப்பிடத்திலே இருக்கிற புதையல்களையும், அந்தகாரத்திலிருக்கிற பொக்கிஷங்களையும் தருவேன் என்று வாக்குறுதி அளித்தீர். அதை நீர் செய்வீராக. அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பேன். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். கர்ப்பம் விழுகிறதும், மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை என்று சொன்னீரே. ஆசீர்வதிப்பீராக," என்று பத்து வசனங்களை அடுக்கு மொழியாக அடுக்கி, கேட்பவர்களைப் பிரமிக்க வைத்துவிடுவார்கள். கொஞ்சம் ஆறுதலாகவும் இருக்கும். அது மட்டுமல்ல. சில சமயங்களில் கர்த்தர் ஆசீர்வதிக்கவும் செய்வார். ஜெபித்த ஜெபத்தினால் அல்ல. அந்த நிர்ப்பந்தமான மனிதனுடைய நிலையைக் கண்டு, இறங்கி ஆசீர்வதிக்கிறார். ஆனால், "நான் ஜெபித்த ஜெபத்தினால் கர்த்தர் ஆசீர்வதித்துவிட்டார்," என்று நாம் நினைத்துக்கொள்வது உண்டு.

### 2. சிலுவை உயிர்த்தெழுதல்மூலமாக விளைவதே ஊழியம்

ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன். இது எண்ணாகமம் 17:8இல் இருக்கிறது. யார் கர்த்தருடைய ஆசாரியன் என்பதைக்குறித்த ஒரு சச்சரவு இஸ்ரயேல் கோத்திரத்திலே வருகிறது. அப்பொழுது ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒரு தலைவனை எடுத்து, "ஒவ்வொரு கோத்திரத்தின் சார்பாக ஒரு காய்ந்த கோலை, ஒரு மரத்துண்டை, எடுத்து தேவனுடைய சமுகத்திலே இரவு வைக்க வேண்டும். காலையில் போய்ப் பார்க்க வேண்டும். யாருடைய காய்ந்துபோன கோல் துளிர்த்திருக்கிறதோ அவன்தான் நான் எனக்கு ஊழியம் செய்யத் தெரிந்துகொண்ட ஆசாரியன்," என்று மோசே சொல்கிறான். பன்னிரெண்டு கோல்களையும் வைத்தார்கள். லேவி கோத்திரத்து ஆரோனுடைய கோல் மட்டும் துளிர்த்திருந்தது.

எப்பொழுது நம்மிடத்தில் மற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு கிறிஸ்து இருப்பாரென்றால் நம்முடைய அனுபவ வாழ்க்கையில் சிலுவை, உயிர்த்தெழுதலை அனுபவித்திருக்க வேண்டும். அனுபவித்திருக்க வேண்டுமென்றால் எப்போதோ வருடத்திற்கு ஒருமுறை அல்ல. நம்முடைய வாழ்க்கை சிலுவை உயிர்த்தெழுதல் வாழ்க்கையாக இருக்க வேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவன் அனுமதிக்கின்ற சிலுவையை மனமார ஏற்றுக்கொண்டு, உயிர்த்தெழுதலால் வாழ முடியும் என்ற விசுவாசத்தோடு நாம் வாழ வேண்டும். அப்போது நம்முடைய கோல்கள் துளிர்த்திருக்கும். பிறருக்குக் கொடுப்பதற்கு நம்மிடத்தில் கிறிஸ்து இருப்பார். இது ஒரு தொழில் அல்ல. நான் இத்துடன் என்னுடைய இந்த வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.